## கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திருமதி.கா.பெமகேஸ்வரி.எம்.ஏ.பி.எட்.,

ந.க எண் 1789/ஆ1/2022 நாள்: 18/01/2023.

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - பணிவரன்முறை - கிருஷ்ணகிரி மாவட்டம், தேவீரப்பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.கு.அருண் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை 1. அரசாணை நிலை எண் 155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை நாள்:10.12.2014.

2.ஓசூர் மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க எண் 4089/2010/அ1 நாள்:27.07.2016.

3. அரசு கடித எண் 11968/ப.க.4(1)/2020 நாள்:14.08.2020.

4. அரசாணை நிலை எண் 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (க்யூ1) நாள்:26.02.2021.

5.தேன்கனிக்கோட்டை மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க எண் 238/அ1/2019 நாள் 21-03-2022 மற்றும் 19-05-2022.

6.அரசாணை எண்.151, பள்ளிக்கல்வி (பக1(1))த் துறை நாள்.09.09.2022.

==@@@@@==

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டம், அளேசீபம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்று 28-07-2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.கு.அருண் என்பார் தனது இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்திட கோரி பார்வை 5 ல் வரப்பெற்ற கருத்துருக்களை பார்வை 6 ல் காண் அரசாணையின் படி முதன்மைக்கல்வி அலுவலருக்கு நியமன அலுவலர் என்ற நிலையில் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் பார்வை 1 மற்றும் 4 ல் கண்ட அரசாணைகளுக்குட்பட்டு நன்கு பரிசீலிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம், பாகலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி 07-11-2007 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த திரு.ஜி.குணராஜ் என்பாரின் வாரிசுதாரர் திரு.கு.அருண் என்பார், தனக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிவாய்ப்பு கோரி 03-03-2008 அன்று முதன் முதலில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பித்த நாளில் தனியருக்கு 17 வயது 9 மாதங்களே பூர்த்தி அடைந்துள்ளது.

தனியர் பணிவாய்ப்பு கோரி விண்ணப்பித்த நாளில், நடைமுறையில் இருந்த அரசாணை மற்றும் அரசுக்கடிதங்களுக்கான விரிவான தெளிவுரைகள் பார்வை 1 ல் கண்ட அரசாணையின் வாயிலாக கீழ்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

"23-08-2005 முதல் 03-05-2010 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்தவர்கள் கருணை அடிப்படையிலான

பணி நியமனத்திற்கான குறும வயதுத் தகுதி தவிர, அனைத்து பிற தகுதிகளை பணிகோரிய விண்ணப்ப நாளிலும், குறும வயதுத் தகுதி மட்டும் (18 ஆண்டுகள் நிறைவு) பணிநியமன நாளிலும் நிறைவு செய்திருந்தால் போதுமானதாக கருதப்பட வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தனியருக்கு கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கோரி முதன் முதலில் விண்ணப்பித்த நாளில் (03-03-2008 அன்று) 17 வயது 9 மாதங்கள் பூர்த்தி அடைந்தும், பணி நியமன நாளில் மேற்குறிப்பிடப்பட்டவாறு குறும வயதுத் தகுதியினை (18 ஆண்டுகள் நிறைவு) பெற்றிருந்ததும் தெரியவருகிறது.

எனவே மேற்கண்ட அரசாணையின் படி , பார்வை 2 ல் காண் செயல்முறைகளுக்கிணங்க, இவர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்று கிருஷ்ணகிரி மாவட்டம், அளேசீபம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 28-07-2016 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 3 ல் கண்ட அரசு கடிதத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க, உரிய காலக்கெடுவிற்குள் பணிவரன்முறை செய்ய கோரும் கருத்துருக்கள் அனுப்பப்பாததற்கான விளக்கம் கோரப்பட்டதன் பேரில் பார்வை 5 ல் வரப்பெற்ற தனியரின் தன்னிலை விளக்கத்தில், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக, பணிநியமனம் பெற்ற ஓராண்டிற்குள் பணிவரன்முறை கோரும் கருத்துருக்கள் அனுப்ப இயலவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனவே, பார்வை 4 ல் கண்ட அரசாணைக்கிணங்க, தனியரின் தன்னிலை விளக்கம், தனியர் சமர்பித்த அசல் ஆவணங்கள் மற்றும் கருத்துருக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்கண்டவாறு இவரின் பெயருக்கு எதிரே கலம் 4 ல் குறிப்பிட்டுள்ள நாளில் தனியரது இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ எண் | பெயர் , பதவி மற்றும் பணிப்புரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.கு.அருண், இளநிலை உதவியாளர் அரசு உயர்நிலைப்பள்ளி, தேவீரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம். | 28-07-2016 முற்பகல் | 28-07-2016 முற்பகல் |

மேலும், இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சினையும், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இப்பணிவரன்முறை ஆணை குறித்து சம்மந்தப்பட்டவரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்/ தலைமையாசிரியருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்
கிருஷ்ணகிரி

பெறுதல்
திரு.கு.அருண்,
இளநிலை உதவியாளர்
அரசு உயர்நிலைப்பள்ளி, தேவீரப்பள்ளி,
கிருஷ்ணகிரி மாவட்டம். (உரிய வழியாக)

நகல்:தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, தேவீரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல்:மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), ஓசூர்.